## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 307/2023** | **நாள் – 11.11.2025** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.சத்யா | கணவர் பெயர் | திரு.ஆனந்த் பாபு |

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல் துறையினரிடம் நான் விபத்து குறித்து புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். பவித்ரன் என்பவர் விபத்து பற்றி கூறிய தகவலின் அடிப்படையில் நான் காவல் துறையினரிடம் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்டவுடன் எனது மகன் எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் அன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனது மகனை அன்பு மருத்துவமனையில் யார் அனுமதித்தது என்றால் நானும், எனது தாயாரும் அன்பு மருத்துவமனையில் சேர்த்தோம். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். விபத்தில் அடிப்பட்டவர் தான் அந்த ஒரு மகன். விபத்து சமயத்தில் எனது மகள் என்ன படித்தார் என்றால் 10ம் வகுப்பு படித்தார். எனது மகன் என்ன வகுப்பு படித்தார் என்றால் 6ம் வகுப்பு படித்தார். விபத்தானது எங்கு நடந்தது என்றால் மேலபுளியாம்பேட்டை பிரதான சாலையில் விபத்து நடந்தது. எனது மகன் எந்த பள்ளியில் படித்தார் என்றால் கார்த்திக் வித்யாலயா பள்ளியில் படித்தார். எனது மகள் சென்ட்ஜோசப் பள்ளியில் படித்தார். நான் எனது குழந்தைகளை

சைக்கிளில் அனுப்பிவிடுவேனா என்றால் எனது மகள் சைக்கிளில் பள்ளிக்கு சென்றுவிடுவார், எனது மகனை பள்ளிக்கு நான் அழைத்துச்சென்றுவிட்டுவிட்டு, வேலைக்கு சென்றுவிடுவேன். என் மகனை மருத்துவமனையில் அனுமதித்த போது மருத்துவரிடம் விவரங்களை நான் கூறி அவர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். எனது மகனை அன்பு மருத்துவமனையில் 25.06.2023 அன்று சேர்த்து 12.07.2023 அன்று அவர் விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். எனது மகனை விடுவிப்பு செய்துவிட்டு 15 நாட்கள் கழித்து மருத்துவமனைக்கு மறு ஆய்விற்கு வருமாறு மருத்துவமனையில் அறிவுறுத்தினார்கள். தற்போது எனது மகன் என்ன வகுப்பு படித்து வருகிறார் என்றால் 8 ம் வகுப்பு படித்து வருகிறார். மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு எனது மகனின் படிப்பு பாதிக்கப்படவில்லை என்றாலும், தொடர்ந்து பள்ளிக்கு சென்று வருகிறார் என்றாலும் சரிதான். மேற்கண்ட மருத்துவ விடுவிப்பு சான்று ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 இரசீதுகளின் வரிசையில் Final Bill என்பதில் CT Scan bill Rs.13,500/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அதற்கு தனியாக ஒரு பில்லும், Lab bills ரூபாய்.3,850/- என்று final bill ல் குறிப்பிட்டுவிட்டு, அதே தொகைக்கு தனியாக ஒரு பில்லும், பார்மசி பில் தொகை ரூபாய்.61,229/- என்று final bill ல் குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில், அதே தொகைக்கு மற்றொரு பில்லும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.9 Final Bill என்பதில் மேற்குறிப்பிட்ட மூன்று பில் தொகைகளை தவிர மற்ற தொகைகளுக்கு தனிப்பட்ட பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். Final bill ல் குறிப்பிட்டுள்ள Lab bills, CT Scan bills, Pharmacy bills என்பதற்கு மேலும்

தனியாக ரூபாய்.13,500/–, ரூபாய்.3,850/– மற்றும் ரூபாய்.61,229/– க்கான பில்கள் தனியாக ம.சா.ஆ.9ல் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும், மேற்கண்ட தனித்தனியான தலைப்பிலான தொகைகள் ஏற்கனவே final bill ' ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு முறை பலன் பெறவேண்டும் என்பதற்காக தனித்தனி தலைப்பிலான தொகைகளுக்கான பில்கள் ம.சா.ஆ.9ல் இணைக்கப்பட்டுள்ளது என்றால் final bill க்காகன விளக்கத்திற்கு தான் மற்றும் மூன்று தலைப்பிலான பில்களை தாக்கல் செய்துள்ளோம். அந்த வகையில் மொத்தம் ரூபாய்.78,579/– தொகைகளுக்கான பில்கள் குறித்து நான் பணம் கோரவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட மூன்று இனங்களுக்கு தனித்தனியான பில்கள் தாக்கல் செய்திருக்கும் பட்சத்தில், மற்ற இனங்களுக்கு தனித்தனியான பில்களை தாக்கல் செய்யாதது அதிகமான இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக மருத்துவரை சுவாதீனப்படுத்திப் பெறப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான். மனுதாரர் நிரந்தர ஊனத்தால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மனுதாரரால் தொடர்ந்து நிற்கவோ, நடக்கவோ, தரையில் அமரவோ முடியவில்லை என்று குறிப்பிட்டிருப்பதும், தொடர்ந்து மனுதாரருக்கு வலி இருப்பதாக சொல்வதும் தவறான சங்கதிகள் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரரின் உறவினரின் தூண்டுதலின் பேரில் சைக்கிளில் சென்ற மனுதாரர் திடீர் என்று சாலையை கடந்ததால் விபத்து நடந்துவிட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மனுதாரர் சைக்கிளில் பயணித்தார் என ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5ல் மிக

தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதை மறைத்து மனுதாரர்விபத்து சமயத்தில் நடந்து சென்றார் என்று உண்மைக்கு புறம்பாக மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.11 17:52:03 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*